**பட்டங்கல பல்கலைக்கழக கல்லூரிம் - 2023**

-----------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

பட்டங்கல பல்கலைக்கழக கல்லூரியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் கல்லூரியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்லூரி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்லூரியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கல்லூரியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான

வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கல்லூரியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கல்லூரியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- கல்லூரியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,
- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 134(3) | கல்லூரியின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தொழிற்தகமை தொழில்நுட்பக் | கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளும் வேலைத்திட்டம் ஒன்று தொடர்பாக எதிர்பார்க்கப்பட்டுள்ள | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு அதன் அறிக்கையின் பிரதி ஒன்று கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கல்லூரியின் உள்ளகக் கணக்காய்வாளரினால் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொண்டு கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | து. | வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 4.2(ஏ) வழிகாட்டி | ஏதாவது ஆண்டொன்றில் ஆகக் குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழுக் கூட்டங்கள் 04 நடாத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் கல்லூரியால் அவ்வாறான கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில் லை. | சகல பல்கலைக்கழக் கல்லூரிகளிலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழுக் கூட்டம் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் தலைமையில் நடாத்த வேண்டியிருந்ததுடன் 2022 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழுக் கூட்டம் 2024 பெப்ரவரி 15 ஆம் திகதி நடாத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழுக் கூட்டங்கள் 04 தடவைகள் ஆகக் குறைந்தது நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 6.6 வழிகாட்டி | கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையும் கல்லூரியின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பல்கலைக்கழக் கல்லூரியின் ஆண்டறிக்கை தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையின் கீழ் பாராளுமன்றத்தில் சமர்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,283,353 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 9,145,926 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,862,573 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மொத்த வருமானம் ரூபா 5,873,844 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கல்லூரியின் 2020, 2021, 2022 ஆம் ஆண்டுகளில் சேர்க்கப்பட்ட 556 மாணவர்களில் உரிய பாடநெறிகளைப் பூர்த்தி செய்யாமல் இடைநடுவில் விட்டுச்சென்ற மாணவர்கள் 60 ஆக இருந்ததுடன் அவர்ளுக்காக அண்ணளவாக கூட்டுமொத்தமாக ரூபா 18 மில்லியன் செலவினம் ஒன்று கல்லூரியால் செலவிடப்பட்டிருந்தது. எனினும் பாடநெறியை இடைநடுவில் விட்டுச் செல்வதைக் குறைத்துக் கொள்வது தொடர்பில் உயர் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | மாணவர்கள் பாடநெறியை விட்டுச் செல்வதைக் குறைத்துக் கொள்வதற்காக மாணவர் ஆலோசனையாளர், விரிவுரையாளர் பதவியணியினர் மற்றும் நிர்வாகப் பிரிவு ஒன்றினைந்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ள துடன் 2024 ஆம் ஆண்டில் இந்த வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மாணவர்கள் பாடநெறியினை விட்டுச்செல்வதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் கவணம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | விவசாயத் திணைக்களத்திற்குரிய 05 ஏக்கர் காணி 2016 ஒக்டோபர் 18 ஆம் திகதி முதல் பட்டங்கல கல்லூரியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 06 திகதி வரையும் அந்தக் காணியைக் கையேற்கும் நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது. | 2016 ஆம் ஆண்டு முதல் கையேற்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது கையேற்பதற்கு தேவையான அளவிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | கல்லூரிக்கு விரைவாக கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியடைதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைக்குரிய 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை குழுக்களுக்காக நடைபெற்ற 12 பரீட்சைகளின் போது, 19 மொடியூல்களுக்காக முதலாவது தடவை பரீட்சைக்குத் தோற்றியதில் சித்தியடையும் சதவீதம் மற்றும் 29 சந்தர்ப்பங்களின் போது மீண்டும் பரீட்சைக்குத் தோற்றியதில் சித்தியடைந்த சதவீதம் 0 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையான கீழ் மட்டத்தில் காணப்பட்டது. | மாணவ மாணவியர்களின் ஆங்கில மொழி மற்றும் காணப்படுகின்ற நலிவுகளை மாற்றியமைப்பதற்காக எதிர்காலத்தில் ஆங்கில மொழியில் முன்னுரிமைத் தன்மை அதிகரித்துக் கொள்வதற்கும் மற்றும் மேற்பார்வை நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக பரீட்சைப் பெறுபேறுகளை அதிகரித்துக் கொள்வதற்கும் வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | மாணவர்களிடம் காணப்படுகின்ற நலிவுகளை இனங்கண்டு அந்தக் குறைபாடுகளை மாற்றியமைப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவம் கவணம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | வெளிவாரி விரிவுரையாளர்களுக்காக திட்டமிடப்பட்ட மணித்தியால எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது பூர்த்தி செய்யப்பட்ட மணித்தியால எண்ணிக்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசேதனையின் போது முழுமையாக மேற்கொள்ளப்பட்ட மணித்தியாலங்களின் எண்ணிக்கை 27 சதவீதம் முதல் 53 சதவீதம் வரை கீழ் மட்டத்தில் காணப்பட்டதன் காரணமாக மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற பாட அறிவு போதியளவான தன்மை மற்றும் தரத்தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது ஏற்றுக்கொள்ளுவதற்கு முடியாதிருந்தது. | வெளிவாரி விரிவுரையாளர்கள் நிறுவனம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு பிரயாணம் செய்யும் போது அவர்களுக்கு ஏற்படுகின்ற வசதியீனம் மற்றும் செய்யவேண்டி ஏற்படுகின்ற செலவினங்கள் விரிவுரை நடாத்துவதற்காக ஒரு மணித்தியாலத்திற்கு செலுத்தப்படுகின்ற கட்டணம் போதியளவில் இல்லாமை போன்ற விடயங்களின் காரணமாகக் கொண்டு சில மொடியூல்களுக்காக வெளிவாரி விரிவுரையாளர்கள் இணையவழி ஊடாக நடாத்துவதற்கு தமது விருப்பத்தைத் தெரிவித்திருந்தனர். | வெளிவாரி விரிவுரையாளர்களுக்காக திட்டமிடப்பட்ட விரிவுரை மணித்தியாலங்களின் அளவை முழுமையாக நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) 2022 திசெம்பர் மாதத்தில் நடாத்தப்பட்ட தகவல் தொழில்நுட்ப பாடநெறிக்குரிய இரண்டு தொகுதிகளின் 114 விடைத்தாள்கள் அடங்கிய பொதி ஒன்று 2023 ஏப்ரல் 06 ஆம் திகதி தொலைந்து போயிருந்தது. அதன் காரணமாக பெறுபேறுகளை வெளியிடுவதற்காக அந்த விடைதாள்களுக்குரிய மாணவர்களிடமிருந்து மேற்கொள்ளப்பட்ட செயலாற்றல் கையளித்தலை அடிப்படையாகக் கொண்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருந்ததுடன் இந்த பெறுபேறுகளை வெளியிடுவதற்கு இரண்டு மாதகாலம் தாமதமடைந்திருந்தது. | இந்த விடயம் தொடர்பாக எமது பல்கலைக்கழக கல்லூரியால் கீழே குறிப்பிடப்படுகின்ற முறைமையொன்று பின்பற்றப்படுகின்றது. சகல உள்ளக விரிவுரையாளர்களுக்காகவும் விடைத்தாள்களின் மதிப்பீடு பல்கலைக்கழக் கல்லூரியில் நடாத்துதல். சகல வெளிவாரி விரிவுரையாளர்களும் விடைத்தாள்களின் மதிப்பீட்டிற்காக எடுத்துச்செல்வதற்கு முன் அவற்றை (Scan Copies) பரீட்சைப் பிரிவற்கு கையளித்து பல்கலைக்கழக கல்லூரிக்கு வெளியில் எடுத்துச் செல்ல அனுமதி வழங்குதல். | விடைத்தாள்களை மதிப்பிடுவதற்காக முறையான திட்ட முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆகஸ்ட் 24 ஆம் திகதி கல்லூரியின் விருந்துபசார முகாமைத்துவ கூடத்திற்காக திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் ரூபா 464,400 பெறுமதியான குளியலறை துணைப்பாகங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2024 மார்ச் 06 ஆம் திகதி வரையிலும் மேற்கூறப்பட்ட முகாமைத்துவத்தால் குளியல் அறை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் மூலம் அந்த உபகரணங்கள் சரியான பிரகாரம் பயன்படுத்துவதற்கு முடியாது பயனற்றுக் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது இந்த பணிகளை பூர்த்தி செய்ய முடியாமையின் காரணமாக 2020 இல் மாணவர் குழுக்களுக்காக இதுவரை தமது பயிற்ச்சி நடவடிக்கைகளை | விருந்துபசார முகாமைத்துவ கூடத்திற்காக தேவையான குளியலறை நிர்மாணிப்பத்தற்காக தற்போது பொருத்தமான இடம் ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கான பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பாடநெறிகளுக்குரிய பிரயோகப் பயிற்ச்சி முழுமையாக பூர்த்தி செய்வதற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தது.

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கல்லூரியில் பொதுவாகக் காணப்படுகின்ற ஊழியர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமை, ஊழியர் சம்பளம், ஊழியர் பதவி முறைமை ஒன்று காணப்படாமை, ஊழியர் இடமாற்ற திட்டம் ஒன்று காணப்படாமை மற்றும் கல்விசாரா பதவி அணியினருக்குரிய ஊழியராகச் சேர்க்கப்பட்ட திகதியிலிருந்து ஒரே பதவியில் இருக்கின்றமை போன்ற ஊழியர் பிரச்சனைகள் தொடர்பாக உயர் முகாமைத்துவத்தால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக கல்லூரிகளில் பொதுவாகக் காணப்படுகின்ற பிரச்சனைகள் தொடர்பாகவும், பதவியணியினரை சேர்ப்பதற்காக காணப்படுகின்ற தேவைகள் தொடர்பாகவும் பல சந்தர்ப்பங்களின் போது உயர் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இது தொடர்பாக பொருத்தமான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | காணப்படுகின்ற ஊழியர் பிரச்சனை தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு கவணம் செலுத்துதல் வேண்டும். |